9th December 1959]

கமிட்டியானது அதனுடைய ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பிவிட்டதா ?

(ஆ) அந்த ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சட்டசபை முன் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Sub-Committee of Industrialists set up by the State Industries Development Committee to process the scheme of Aluminium Project at Salem was not expected to submit any report to Government. It was intended to advise the Government on any specific matter relating to the project that might be referred to it.

(*b*) Does not arise.

*Aluminium deposits in Salem district*

* 90-A *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any report has been submitted by the Italian Experts on the nature of aluminium deposits in Salem district, the use to which they could be put to;

(*b*) if so, whether a copy of the same will be laid on the table of the House; and

(*c*) the decision taken by the Government thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir. The report is treated as confidential.

(*c*) As the Plant will be set up in the private sector, there is no particular decision to be taken by Government.

SRI S. LAZAR : Sir, May I know, the stage at which the Project now stands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The report is under examination. Preliminary attention is being paid to the organisation of the industry.

SRI P. G. MANICKAM : தனியார் துறையிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கு யார் முன்வந்திருக்கிறார்கள் ? அவர்களோடு சர்க்கார் என்ன நிபந்தனை செய்துகொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூரில் ஸ்ரீ. ஆர். வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் இந்தத் தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் மற்ற உதவியையும் நாடி, அந்த உதவிகளை வைத்துக்கொண்டு இந்தத் தொழிலை அமைப்பதற்கு இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

[9th December 1959

SRI K. ANBAZHAGAN : சேலத்தில் அலுமினியம் தொழிற் சாலையை அரசாங்கம் தாங்களே மேற்கொண்டு நடத்த முடிய வில்லை என்ற காரணத்தினால்தான் தனியார் துறையில் விடுகிறார் களா? தனியார் துறையில் விடுவதற்கு ஏதேனும் தக்க காரணம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனியார் துறை யில் நடத்துவதா, அல்லது பொதுத் துறையில் நடத்துவதா என்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. தனியார் துறையில் நடத்துவது நலன் என்று தோன்றியதால், அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : சர்க்கார் இதில் ஏதாவது பங்குகள் போட உத்தேசிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் அவ்வாறு உதவி செய்யவேண்டியிருக்கும். அதுவும் கவனிக்கப்படும்.

SRI P. S. CHINNADURAI : அலுமினியம் தொழிற்சாலையை தனியார் துறையில் முற்றிலும் விட்டுவிடுவதற்கு பதிலாக, பொதுத் துறையில் எடுத்துக்கொள்ளுவதற்கு சர்க்கார் தயாராக இல்லாததன் காரணமாக, சர்க்காரும் தனியார் துறையும் சேர்ந்து 'ஜாயிண்டு ஸ்டேட் எண்டர்பிரைஸ்' என்று சொல்லப்படுகின்ற திட்டத்தின்கீழ் எடுத்து நடத்த முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரும் இதிலே ஈடுபடுவார்கள், உதவி செய்வார்கள் என்று சொன்னேன். ஆகை யினால், இதில் சர்க்கார் கண்காணிப்பும் இருக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்பொழுது நடக்கும் இந்தப் பரிசீலனை சாதகமான முறையில் சென்று கொண்டிருக் கிறது என்றாகிலும் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி ஐயம் வேண்டியதில்லை. அவ்வாறு சாதகமாக இருக்கிறது, எடுத்துக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இந்த அறிக்கை ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதை வெளி யிட்டால் சர்க்காருக்கு என்ன பாதகம் ஏற்படும்? ஏன் அதை வெளியிடக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருக்கு பாதகம் ஏற்படாது, தொழிலுக்குத்தான் பாதகம் ஏற்படும். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். தொழில் முறையில் சிற்சில விஷயங்களை வெளியிடக்கூடாது. ஏனென்றால், தொழிலில் போட்டா போட்டி இருக்கிறது. ஆகவே, தொழில் பாதிக்கப் படும் என்பதற்காகத்தான் இதை வெளியிடுவதற்கில்லை.

9th December 1959]

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் அலுமினியம் செய்யக் கூடிய பாக்ஸைட் 20 லட்சம் டன் தற்போதைக்கு கிடைக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்கார் இதுபற்றி ஆராய்ச்சி செய்து, அப்படி என்றால் அங்கு ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. இதுவரையில் எனக்கு ஒன்றும் தெரியாது. தனியாக கேள்வி கேட்டால், பார்த்து சொல்லலாம்.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலையை பொதுத் துறையிலே நடத்துவதற்கு சர்க்கார் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது தனியார் துறையிலே சௌகர்யம் இருக்கிறது என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். பொதுத் துறையை விட, தனியார் துறை எந்த விதத்தில் சௌகரியம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே சொன்னேன், சில பெரிய கனரகத் தொழிற்சாலைகளை தனியார் துறையில் நடத்துவது, சிலவற்றை பொதுத் துறையில் நடத்துவது என்று. குறிப்பிட்ட ஒரு தொழிலை எப்படி நடத்துவது என்று யோசனை செய்து பரிசீலனை செய்யப்படுகிறது. முதலில் இந்த அலுமினியம் தொழிற்சாலை பொதுத் துறையில் நடத்துவதாக யோசிக்கப் பட்டது. பிறகு பரிசீலனை செய்ததில் பொதுத் துறையில் வேண்டாம், தனியார் துறையில் நடத்துவது நலன் என்ற முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the scheme will be taken up before the end of the Second Five-Year Plan itself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do think so, Sir.

SRI A. MARIAPPAN : இந்தத் தொழிலை வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பதினால்தான் தாமதம் ஆகிறது என்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமா?

MR. SPEAKER : The question is out of order.

*Political Sufferers*

* 79 Q.—SRI P. S. CHINNADURAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா— 9-30 a.m.

(அ) சுதந்திரப் போராட்டத்தில் கலந்துக்கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு விசேட கல்விச் சலுகைகளை, அதாவது, இலவச ஆஸ்டல் போன்றவைகளை விஸ்தரிப்பது குறித்து இந்த சர்க்கார் ஆலோசித்து வருகிறதா?